**கவனிக்க.**- *2007.03.30 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1492 - 2007 අප්‍රේල් 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2007.04.05

*1492 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 226 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 227 |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | 228 |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, ஏப்பிறல் 12 ஆந் தேதி வியாழக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, மாச்சு 30 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம், மல்லாகம்

சான்றுப் பொருட்கள் ஏல விற்பனை

பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான கீழ்க்காணும் பொருட்கள் 2007.03.10 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

1. குறிப்பிட்ட ஏதாவது பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏலவிற்பனைக்கு குறிப்பிட்ட தினத்தில் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

2. பதிவாளரின் அனுமதி பெற்று ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு முன்னர் ஏலவிற்பனைக்கென குறிப்பிட்ட பொருட்களைப் பொது மக்கள் பார்வையிடலாம்.

3. நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படும் தகுந்த தொகையானது விற்பனையின் போது ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில் மன்றின் விருப்புரிமையின் பிரகாரம் அப்பொருட்களை ஏலவிற்பனையில் இருந்து நீக்கி விடுவதற்கான உரித்தை மன்று கொண்டுள்ளது.

4. ஏலவிற்பனையின் போது ஏலத்தில் வாங்கப்பட்ட பொருட்கள் உடனடியாக பணம் செலுத்தப்பட்டு நீதிமன்ற வளவில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. பொருட்கள் ஏலத்தில் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வரவேண்டுமென அறியத்தரப்படுகின்றது.

ச. இளங்கோவன்,
மாவட்ட நீதிபதி,
மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
மல்லாகம்.

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
மல்லாகம்.
10.01.2007.

| தொடர் இல. | வழக்கு இல. | ரகம் | விபரம் | பதிவு இலக்கம் | தீர்ப்பு வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|---|
| 1. | ஏஆர் 485/05 | து.ச.வ. | ஏசியா | 03சீ3036 | 29.11.2005 |
| 2. | 5215 | து. ச.வ. | லமாலா | 55741162 | 19.06.2006 |
| 3. | ஏஆர் 364/04 | து.ச.வ. | லுமாலா | ஏ41208 | 24.11.2006 |
| 4. | ஏஆர் 364/04 | து.ச.வ. | லுமாலா | 55517894 | 24.11.2006 |
| 5. | ஏஆர் 364/04 | து.ச.வ. | ஈஸ்ரன் | 01ஈஆர்2936 | 24.11.2006 |
| 6. | ஏஆர் 364/04 | து.ச.வ. | லுமாலா | 11119955 | 24.11.2006 |
| 7. | ஏஆர் 364/04 | து.ச.வ. | லுமாலா | எஸ்ஆர்எஸ்ஓ2247 | 24.11.2006 |
| 8. | ஏஆர் 364/04 | து.ச.வ. | லுமாலா | ஏபி1878 | 24.11.2006 |
| 9. | ஏஆர் 364/04 | து.ச.வ. | லுமாலா | என்எம்0835 | 24.11.2006 |
| 10. | ஏஆர் 364/04 | து.ச.வ. | லுமாலா | 55924949 | 24.11.2006 |
| 11. | ஏஆர் 364/04 | து.ச.வ. | ஏசியா | 0607895 | 24.11.2006 |
| 12. | ஏஆர் 134/06 | து.ச.வ. | லுமாலா | 55559837 | 19.04.2006 |
| 13. | ஏஆர் 283/04 | து.ச.வ. | - | எக்ஸ்129924 | 01.03.2005 |
| 14. | ஏஆர் 314/04 | து.ச.வ. | றலி | எச்ஓ2889 | 05.10.2004 |
| 15. | ஏஆர் 162/03 | து.ச.வ. | லுமாலா | 56107877 | 27.05.2003 |
| 16. | 1798 | து.ச.வ. | லுமாலா | 55740482 | 20.09.2005 |
| 17. | ஏஆர் 119/00 | து.ச.வ. | லுமாலா | ஏ25218 | 14.07.2000 |
| 18. | ஏஆர் 32/01 | து.ச.வ. | ஏசியா | 0600930 | 23.07.2004 |
| 19. | ஏஆர் 183/05 | து.ச.வ. | லுமாலா | - | 20.09.2005 |
| 20. | ஏஆர் 70/05 | து.ச.வ. | லுமாலா | 55780553 | 18.02.2005 |
| 21. | ஏஆர் 70/05 | து.ச.வ. | தெளிவில்லை | ஏபி1387 | 18.02.2005 |
| 22. | ஏஆர் 70/05 | து.ச.வ. | தெளிவில்லை | 002ஏபி7406 | 18.02.2005 |
| 23. | ஏஆர் 70/05 | து.ச.வ. | லுமாலா | 12285723 | 18.02.2005 |
| 24. | ஏஆர் 372/04 | கல்லுகள் | - | - | 30.11.2004 |
| 25. | 7508 | ஸ்ரான் றில்லர் | கிராவியஸ் இனம் | 101789 சிவிஎவ்06606 | 10.03.2005 |

| தொடர் இல. | வழக்கு இல. | ரகம் | விபரம் | பதிவு இலக்கம் | தீர்ப்பு வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|---|
| 26. | 7760 | செல்போன் | நொக்கியா இனம் | 1100சீஎவ்168 | 06.05.2005 |
| 27. | 7266 | 1. ரோஜ் | - | - | 28.01.2005 |
| | | 2. கோடாலி | - | - | 28.01.2005 |
| | | 3. கத்தி | - | - | 28.01.2005 |
| 28. | ஏஆர் 60/01 | தொலைக்காட்சிப் பெட்டி | - | - | 08.02.2001 |
| 29. | ஏஆர் 210/04 | மின்சார விசிறி | - | - | 21.06.2004 |
| 30. | 5128 | கத்திகள்-02 | - | - | 13.10.2003 |
| 31. | ஏஆர் 96/01 | தொலைக்காட்சிப் பெட்டியும் | | | |
| | | றேடியோவும் | நைசனல் | ஏ031115 | 13.03.2001 |
| 32. | ஏஆர் 119/00 | கோடாரி | - | - | 24.07.2000 |

4-23

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

14375 என். டபிள்யூ. சயன்ஸ் பார்க் ட்ரைவ், போர்ட்லண்ட், ஒரிகன், யூ. எஸ். ஏ. என்னும் முகவரியைச் சேர்ந்த கொழம்பியா ஸ்போர்ட்வெயார் கம்பனியின் துணைத் தலைவர்/ பொது வழக்குரைஞர், செயலாளர், பீட்டர் ஜே. பிராக்டன் ஆகிய நான், 27/13, பார்க் லேன், நாவல, ராஜகிரிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு என்னும் முகவரியைச் சேர்ந்த சுரேஷ் ஜோன் என்பவருக்கு வழங்கப்பட்டு 1992, பெப்புருவரி 20 ஆந் திகதியன்று பதிவுசெய்யப்பட்டதும் பிரசித்த நொத்தாரிசு மைக்கல் ஷேன் மட்னி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான 1992, சனவரி 28 ஆந் திகதிய அற்றோணித் தத்துவம் இத்தால் இல்லாதொழிக்கப்பட்டும் இரத்துச் செய்யவும்படுகின்றது எனவும், இனிமேலாக சொல்லப்பட்ட அற்றோணித் தத்துவத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன் எனவும் பொதுமக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

பீட்டர் ஜே. பிராக்டன்,
துணைத் தலைவர்/பொது வழக்குரைஞர்
மற்றும் செயலாளர்,
கொழம்பியா ஸ்போர்ட்ஸ்வெயார் கம்பனி.

4-31

## அட்டோர்னித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருவது யாதெனில், இலக்கம் 34, கொழும்பு வீதி, பிலியந்தலையில் வசிக்கும் மகியபால ஆராச்சிகே வில்பிரட் மகியபால ஆகிய நான், அட்டோர்னித் தத்துவப்பத்திரம் இல. 229, கொழும்பு நொத்தாரிசு எம். எச். குணசிறியினால் கைச்சாத்திடப்பட்ட உறுதிப்பத்திரம் எனக்கு வழங்கப்பட்டு இல. 1/58, மடபாத்த வீதி. கொலமுன்ன, பலியந்தலையில் வசிக்கும் ஹேரத் முதியன்சலாகே டனபால ஹேரத்திற்கு என்னால் வழங்கப் பட்டஅட்டோர்னிப்பத்திரம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மகியபால ஆராச்சிகே வில்பிரட் மகியபால

4-57

## அற்றோணித் தத்துவத்தை இல்லாதொழித்தல்

முன்னர் No. 3, Seagrave Court, Walton Milton Keynes MK 7 HA United Kingdom என்னும் முகவரியையும் தற்பொழுது No. 7, Bridlington Crescent Monkston Milton Keynes MK 10 9Bu, United Kingdom என்னும் முகவரியையும் சேர்ந்த சீக்கு பதுகே துலித் கசுன் டீ சில்வா ஆகிய நான், பிராங்லிங் சொலிசிட்டர்ஸ் எல். எல். பி. யினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, ஏப்பிறல் 12 ஆந் திகதிய விசேட அற்றோணித் தத்துவத்தால் என்னால் சீக்கு பதுகே தசுன்மி நாமல்கா டீ சில்வா என்பவருக்கு அளிக்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவம் 2007, மாச்சு 26 முதல் இத்தால் இல்லாதொழிக்கவும் இரத்துச் செய்யவும்படுகின்றது எனவும் இனிமேலாக மேற்கூறப்பட்ட சீக்கு பதுகே தசுன்மி நாமல்கா டீ சில்வா என்பவரால் எனது அற்றோணித் தத்துவக்காரர் என்ற தன்மையில் செய்யப்படும் ஏதேனும் செயலுக்கு அல்லது செயற்பாட்டிற்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன் எனவும் இத்தால் பொது மக்களுக்கு அறிவித்தல் கொடுக்கின்றேன்.

சீக்கு பதுகே துலித் கசுன் டீ சில்வா.

2007, மாச்சு 26

4-98

# ஏல விற்பனைகள்

## டீ. எப். சி. சி. வங்கி

(முன்பு இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம்)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

*1521 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களின் விவரணம்*

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெல்லபொட பத்துவில் பத்தேகம தெற்கில் அமைந்துள்ள அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். கே. ஜீ. சில்வாவினால் வரையப்பட்ட 20.04.2002 ஆந் திகதியிடப்பட்ட 1197 ஆம் இலக்க காணி வரைபடத்தில் A துண்டில் குறிப்பிடப்பட்டுள்ள பரணகெதரவத்த அல்லது மஹகெதரவத்த என்று அழைக்கப்படும் C துண்டின் A, B துண்டுகள், பரணகெதரவத்த அல்லது மஹகெதரவத்த என்று அழைக்கப்படும் காணியின் D துண்டும், B துண்டின் ஒரு பகுதியும் பரணகெதரவத்த அல்லது மஹகெதரவத்த என்று அழைக்கப்படும் காணியின் E துண்டின் ஒரு பகுதியும் பரணகெதரவத்த அல்லது மஹகெதரவத்த என்று அழைக்கப்படும் காணியின் F துண்டின் C துண்டின் 1 ஆம் இலக்கக் காணித்துண்டு. காணியின் விஸ்தீரணம் 00ஏ. 02றூ. 12.96பே. நிலம், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள அனைத்தும் உள்ளடங்கலாக அனுராதபுரத்தைச் சேர்ந்த நாவோடுன்ன பள்ளியகுருகே சந்திரா ரஞ்சித் சமரநாயக்க என்பவர், அனுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு எஸ். கே. என். ஏ. குரேராவினால் 2003 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1521 ஆம் இலக்க அடைமான பிணை உறுதிகள் மூலம் DFCC வங்கிக்கு அடகுவைக்கப்பட்டு மீளளிக்கப்படாத சொத்தை DFCC வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/ 2% (இரண்டரை வீதம்) ;
(4) விளம்பரச் செலவான ரூ. 27,115 ஐ மொத்தமாக ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500% ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்டரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகாரசபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் DFCC வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ISO 9001 : 2000 இலக்க தராதரமுடைய
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர்
மற்றும் காணி செயல் முகவர்.

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகம் :* |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி இல : 081-2227593 | தொலைபேசி இல. : 011-2502680, 2585408 |
| தொலைபேசி/ தொலைநகல் : 081-2224371 | தொலைபேசி/ தொலைநகல் : 011-2588176 |
| | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

4-150

---

## டீ. எப். சி. சி. வங்கி

(முன்பு இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம்)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

*155 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களின் விவரணம்*

நில அளவையாளர் எம். ஜீ. ஷெல்டன் சமரதுங்கவினால் வரையப்பட்ட 1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதியிடப்பட்ட 2048A ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாறவில பதிவுப்பிரிவில் உள்ள பிட்டிகல் கோரளை தெற்கில் கம்மல் பத்துவில் உள்ஹிட்டியாவயில் அமைந்துள்ள மடங்கஹவத்த, தல்கஹவத்த, மடங்கஹவத்த என அழைக்கப்படும் காணி. காணியின் விஸ்தீரணம் 0ஏ. 01றூ. 06பே. நிலம், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள அனைத்தும் உள்ளடங்கலாக வென்னப்புவ, உள்ஹிட்டியாவ, தெற்கு கடவத்த வீதி, 'ரோசரி விலா'வைச் சேர்ந்த வர்ணகுலசூரிய ஜோன் அன்செலம் டைட்டஸ் திசேரா என்பவரால், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. ரண்முகாராச்சியினால் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 155 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் DFCC வங்கிக்கு அடகுவைக்கப்பட்டு மீளளிக்கப்படாத சொத்து DFCC வங்கியினால் எமக்களிக்கப்பட்ட

அதிகாரத்தின்படி 2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை வீதம்) ;

(4) விளம்பரச் செலவான ரூ. 24,615 ஐ (மொத்தமாக) ;

(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500% ;

(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்டரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகாரசபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங் களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- "011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் DFCC வங்கியின் சட்டப் பிரிவு" உடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ISO 9001 : 2000 இலக்க தராதரமுடைய
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர்
மற்றும் காணி செயல் முகவர்.

| *தலைமை அலுவலகம்:* | *நகர அலுவலகமும் காட்சியறையும்:* |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, | 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி. | கொழும்பு 5. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல. : 011-2502680, 2585408 |
| தொலைபேசி/ தொலைநகல் : 081-2224371 | தொலைபேசி/ தொலைநகல் : 011-2588176 |
| | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

4-151

## மக்கள் வங்கி-பிலியந்தல தலைமையலுவலகம்

*1986 ஆம் ஆண்டின் சட்ட இல. 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்ட இல. 29 இன் பிரிவு 29 டி இன் கீழான விற்பனை*

*மேல்மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிற்றி கோரளை பள்ளேபற்றுவில் பிலியந்தல நாம்பமுணுவவிலமைந்த துண்டு 2சீ மற்றும் துண்டு 2 டீ எனக்குறிக்கப்பட்ட பெறுமதிவாய்ந்த நுகஹலந்த என அழைக்கப்படும் காணி, தோட்டம், அதிலுள்ள அனைத்துமுடன் ஏல விற்பனை*

(விஸ்தீரணம் - துண்டு 2 சீ)-0ஏ. 3று. 35பே.
துண்டு 2 டீ)-0ஏ. 1று. 35பே.)

மக்கள் வங்கியால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், அதேயிடத்தில்,

2007, ஏப்பிறல் 25 ஆந் திகதி மு.ப. 11. 30 மணியிலிருந்து, பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2006.11.16 ஆந் திகதிய 'சிலோன் டெய்லி நியூஸ்', 'தினமின' பத்திரிகைகளையும் 2006.12.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் தயவுசெய்து பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி.**- பிலியந்தலையிலிருந்து மஹரகம வீதியினூடு ஏறத்தாழ 2 கிமீ செல்ல தொலேகனத்த சந்தியை அடை வீர்கள். உங்கள் வலதுபக்கம் திரும்பி கொட்டாவ வீதியினூடு ஏறத்தாழ 400 மீட்டர்கள் செல்ல குறித்த காணியானது உங்கள் இடதுபக்கம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவுமுறை.**- ஏலத்தினிறுதியில் சித்திகரமான கொள்வன வாளர் பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்தவேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிசபைகளுக்குச் செலுத்தப்படவேண்டிய உள்ளூராட்சி வரியாக 1% ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக கொள்வனவு விலையின் 2 1/2% ;
(4) கிளார்க், கூவுவோர் கட்டணமாக ரூ. 850 ;
(5) விற்பனைக்கான மொத்தச் செலவும் ஏனைய அறவீடுகள் ஏதுமிருப்பின் அவையும் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்வனவு விலையின் எஞ்சிய 90% (தொண்ணூறுவீதம்), 30 நாட்களுக்குள் "கொழும்பு 01, டியூக் வீதி, இல. 11, வலய அலுவலகம் (மேற்கு வலயம்), மக்கள் வங்கி, உதவிப் பொதுமுகாமையாளரிடம் செலுத்தவேண்டும். தொலைபேசி இல. : 2393678, 2327848, 2344982, 2344983, 2344985. மேற்படி விலாசத்தில் காணி உறுதி மற்றும் விபரங்களைப் பெறலாம்.

மேலே குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள், குறித்ததொகை செலுத்தப்படாவிடின், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து சொத்தை மீள விற்கும் உரிமை வங்கிக்குண்டு.

ரஞ்ஜித் எஸ். மஹநாம,
சமாதான நீதவான் (அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

மஹநாம ட்ரைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே
தொலைபேசி இல. : 2863121

4-99

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்**.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்**. தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்**.

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|
| (அ) I வது பகுதி | 31.00 | 5.00 |
| II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) I வது பிரிவு | 10.00 | 5.00 |
| II வது பிரிவு | 12.00 | 5.00 |
| III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.***

**அட்டவணை - 2007**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 05.04.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.03.2007 |
| | | வியாழன் | 12.04.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.03.2007 |
| | | வெள்ளி | 20.04.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 05.04.2007 |
| | | வெள்ளி | 27.04.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 12.04.2007 |
| **மே** | .. | வெள்ளி | 04.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.04.2007 |
| | | வெள்ளி | 11.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.04.2007 |
| | | வெள்ளி | 18.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.05.2007 |
| | | வெள்ளி | 25.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.05.2007 |
| **யூன்** | .. | வெள்ளி | 01.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.05.2007 |
| | | வெள்ளி | 08.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.05.2007 |
| | | வெள்ளி | 15.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.06.2007 |
| | | வெள்ளி | 22.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.06.2007 |
| | | வெள்ளி | 29.06.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.06.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007, சனவரி 01.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*